VETRI

# வள்ளலார் வாக்கில் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் காட்டியதும் கடத்தியதும்

## சன்மார்க்கம் அறிவோம் - பாடம் 8


தொகுப்பு

முனைவர் வை. நமசிவாயம், VETRI



வெளியீடு

வள்ளலார் யூனிவர்சல் மிஷன், U.S.A

மற்றும்

வள்ளலார் கல்விப் பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம், வடலூர் (VETRI)

## Contents

வள்ளலார் வாக்கில் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் காட்டியதும் கடத்தியதும் .. 4

1. வள்ளலாருக்கு காட்டியது ..... 4
2. வள்ளலாரை கடத்தியது ..... 4
3. ஆறாறு (6 x 6 = 36) என்பது தத்துவங்களை குறிக்கிறது ..... 4
4. கடவுள் அறிவுப் பொருள் ..... 4
5. ஆன்மா (சித்து) அறிவுப் பொருள். உடல் அறிவில்லா கருவி (சடம்) ..... 5
6. ஆன்மா தன்னை அறிவுப் பொருள் எனத் தெளிந்து கருவிகளாகிய தத்துவங்களினின்று நீங்கித் தனிக்குந் தருணத்தே கடவுள் தோன்றுந்துணையாய் விளங்குகின்றார். தனியா இடத்துத் தோன்றாது துணையாய் இருப்பார். ..... 6
7. தத்துவங்களையும் அவற்றின் செயல்களையும் தெரிவிக்கும் தத்துவ ஞானம் நாம் பெறவில்லை என வள்ளலார் வருந்துகிறார் ..... 7
8. ஆன்மா எக்காலத்தும் உள்ளதாய் விளங்கப்பட்டது. அது தோன்றுதலும் அழிதலுமில்லை. அதை ஆக்கவும் அழிக்கவும் படாது. ..... 8
9. அறிவில்லாத பொருட்கள் தோன்றி அழியும். மாயையின் காரியமாகிய உடல் அழியும். எனவே தத்துவங்கள் நிலையில்லாதவை ..... 8
10. இறைவன் நிலையாக, என்றும் மாறாத தன்மையுடன், மெய் அறிவு இன்ப வடிவாகி எங்கும் நீக்கமற நிறைந்துள்ள மெய்ப்பொருள். அவன் தத்துவங்களைக் கடந்தவன் ..... 8
11. 36 தத்துவங்களும் ஆன்மாவிற்கு பரு உடல், நுண் உடல், மிகு நுண் உடல் (காரண உடல்/ பர சரீரம்) எனப் பொருந்தி நிற்கும் ..... 9
12. தத்துவங்களின் வலிமையை வென்று உயர்தல் கடத்தல் ஆகும். தத்துவங்கள் அறிவில்லாதவை என ஆராய்ந்து உணர்ந்து அவற்றை நீக்கி, அவற்றின் முடிவில் நின்ற தன்னை அறிதல் ஆன்ம தரிசனம். இதுவே உயிர் அனுபவம் ..... 9
13. இப்பயிற்சிக்கு உதவுவது இந்திரிய ஒழுக்கம் முதலியவை. ..... 9
14. மக்கள் "அறிய வேண்டுவனவற்றை அறிய முயலவில்லை" என்று "கற்பன கற்கிலீர்" எனப் பாடுகிறார் ..... 10
15. கடவுளை "அறிவால் அறிந்து கடவுள் மயமாவதற்கு" தத்துவ நிக்கிரகம் வழி என வள்ளலார் கூறுகிறார் ..... 11

**16. வள்ளலார் சங்க விண்ணப்பத்தில் தெளிவாகவும் சுருக்கமாகவும் இதனை விளக்குகிறார்** ........ 11
**17. என்னை வாழ்வித்தல் வேண்டும்** ........ 11
**18. எல்லாச் சீவர்களையும் வாழ்வித்தல் வேண்டும்** ........ 12
**19. இங்கனமாக "சத்தியமான அதிதீவிர விருப்ப முயற்சியுடையவர்கள்" கடவுளை அறிவால் அறிந்து அம்மயம் ஆவார்கள்** ........ 12
**பின் குறிப்பு: 96 தத்துவங்கள்** ........ 13

இராமலிங்காய நம

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# வள்ளலார் வாக்கில் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் காட்டியதும் கடத்தியதும்

## 1. வள்ளலாருக்கு காட்டியது

**அகவல்**

**ஏறா நிலைமிசை ஏற்றிஎன் தனக்கே**
**ஆறாறு காட்டிய அருட்பெருஞ் ஜோதி 18**

## 2. வள்ளலாரை கடத்தியது

**அகவல்**

**ஏறா நிலைநடு ஏற்றி என்றனை ஈண்டு**
**ஆறாறு கடத்திய அருட்பெருஞ் ஜோதி 312**

## 3. ஆறாறு (6 x 6 = 36) என்பது தத்துவங்களை குறிக்கிறது

**- தத்துவம் என்பது கருவி. அறிவில்லாதவை**

**- தத்துவத்தின் செயல் (காரியம்) தாத்விகம்**

**- தத்துவம் 36**

## 4. கடவுள் அறிவுப் பொருள்

**தத்துவங்களை கடந்த நிலையில் உள்ளவர். தத்துவங்களைச் செயல்படுத்தும் ஆற்றலுடையவர்**

**அகவல்**

**தத்துவா தீதத் தனிப்பொருள் வெளிஎனும்**
**அத்திரு அம்பலத் தருட்பெருஞ் ஜோதி 48**

### #6-003-7 ஆறாம் திருமுறை / அருட்பெருஞ்சோதி அட்டகம்

**தத்துவம் அனைத்தும் தனித்தனி கடந்தேம்**
**தத்துவா தீத மேல் நிலையில்**
**சித்தியல் முழுதும் தெரிந்தனம் அவைமேல்**
**சிவநிலை தெரிந்திடச் சென்றேம்**
**ஒத்தஅந் நிலைக்கண் யாமும் எம் உணர்வும்**
**ஒருங்குறக் கரைந்து போயினம் என்**
**றத்தகை உணர்ந்தோர் வழுத்த நின் றோங்கும்**
**அருட்பெருஞ் சோதிஎன் அரசே.**

## 5. ஆன்மா (சித்து) அறிவுப் பொருள். உடல் அறிவில்லா கருவி (சடம்)

**உடலைத் தான் என்று உயிர் மயங்கி அறிகிறது. இதனைத் தெளிவுபடுத்திக் காட்டுவது கடவுளின் திருவருள்**

### ஜீவகாருண்ய ஒழுக்கம் முதற் பிரிவு

**இந்தத் தூலதேகத்தில் சீவனாக இருக்கிற ஆன்மாவும் அறிவுக்கறிவாயிருக்கிற கடவுள் இயற்கை விளக்கமுந் தவிர, கரணம் இந்திரியம் முதலிய மற்றவைகளெல்லாம் கருவிகளாகிய தத்துவசடங்களே யல்லது சித்துக்களல்ல. ஆகலில் சுகதுக்கங்களைச் சடங்கள் அனுபவிக்க அறியா.**

### #4-002-067 நான்காம் திருமுறை / அருட்பிரகாச மாலை

**ஆறாறு தத்துவத்தின் சொரூபமுதல் அனைத்தும்**
**அறிவிக்கும் ஒன்றவற்றின் அப்பாலே இருந்த**

**வீறாய தற்சொருப முதலனைத்தும் அறிவில்
விளக்குவிக்கும் ஒன்றென்று விளைவறிந்தோர் விளம்பும்
பேறாய திருவடிகள் வருந்தநடந் திரவில்
பேயடியேன் இருக்குமிடத் தடைந்தென்னை அழைத்துச்
சோறாய பொருள்ஒன்றென் கரத்தளித்தாய் பொதுவில்
சோதிநின தருட்பெருமை ஓதிமுடி யாதே.**

### #4-002-068 நான்காம் திருமுறை / அருட்பிரகாச மாலை

**கருவிகளை நம்முடனே கலந்துளத்தே இயக்கிக்
காட்டுவதொன் றக்கருவி கரணங்கள் அனைத்தும்
ஒருவிஅப்பாற் படுத்திநமை ஒருதனியாக் குவதொன்
றுபயம்எனப் பெரியர்சொலும் அபயபதம் வருந்தத்
துருவிஅடி யேன்இருக்கும் இடத்திரவில் அடைந்து
துணிந்தெனது கையில்ஒன்று சோதியுறக் கொடுத்து
வெருவியிடேல் இன்றுமுதல் மிகமகிழ்க என்றாய்
வித்தகநின் திருவருளை வியக்கமுடி யாதே.**

## 6. ஆன்மா தன்னை அறிவுப் பொருள் எனத் தெளிந்து கருவிகளாகிய தத்துவங்களினின்று நீங்கித் தனிக்குந் தருணத்தே கடவுள் தோன்றுந்துணையாய் விளங்குகின்றார். தனியா இடத்துத் தோன்றாது துணையாய் இருப்பார்.

### #4-002-055 நான்காம் திருமுறை / அருட்பிரகாச மாலை

**நான் தனிக்குந் தருணத்தே தோன்றுகின்ற துணையாய்
நான் தனியா இடத்தெனக்குத் தோன்றாத துணையாய்
ஏன்றருளுந் திருவடிகள் வருந்த நடந் தருளி
யானுறையும் இடத்தடைந்து கதவு திறப்பித்து
ஆன்ற எனை அழைத்து எனது கையில் ஒன்று கொடுத்தாய்க்கு
அறிவிலேன் செய்யும்வகை அறியேன் நின் கருணை
ஈன்றவட்கும் இல்லைஎன நன்கறிந்தேன் பொதுவில்
இன்பநடம் புரிகின்ற என்னுயிர் நாயகனே.**

#4-002-090 நான்காம் திருமுறை / அருட்பிரகாச மாலை

**வானதுவாய்ப் பசுமலம் போய்த் தனித்து நிற்குந் தருணம்**
**வயங்கு பரானந்த சுகம் வளைந்துகொள்ளுந் தருணம்**
**தானதுவாய் அது தானாய்ச் சகசமுறுந் தருணம்**
**தடையற்ற அனுபவமாந் தன்மையடி வருந்த**
**மானதுவாய் நடந்தெளியேன் இருக்குமிடத் தடைந்து**
**மணிக்கதவந் திறப்பித்து மகிழ்ந்தெனை அங் கழைத்து**
**ஆனதொரு பொருளளித்தாய் நின்னருள் என் என்பேன்**
**அம்பலத்தே நடம்புரியும் எம்பெருஞ்சோ தியனே.**

## 7. தத்துவங்களையும் அவற்றின் செயல்களையும் தெரிவிக்கும் தத்துவ ஞானம் நாம் பெறவில்லை என வள்ளலார் வருந்துகிறார்

#6-104-04 ஆறாம் திருமுறை / உலகர்க்கு உய்வகை கூறல்

**சாமாந்தர் ஆகாத் தரஞ்சிறி துணரீர்**
**தத்துவ ஞானத்தை இற்றெனத் தெரியீர்**
**மாமாந்த நோயுற்ற குழவியில் குழைந்தீர்**
**வாழ்க்கையி லேஅற்ப மகிழ்ச்சியும் பெற்றீர்**
**காமாந்த காரத்தில் கண்மூடித் திரிவீர்**
**கற்பன கற்கிலீர் கருத்தனைக் கருதா**
**தேமாந்து தூங்குகின் றீர்விழிக் கின்றீர்**
**எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.**

#6-104-05 ஆறாம் திருமுறை / உலகர்க்கு உய்வகை கூறல்

**அச்சையும் உடம்பையும் அறிவகை அறியீர்**
**அம்மையும் அப்பனும் ஆர்எனத் தெரியீர்**
**பச்சையும் செம்மையும் கருமையும் கூடிப்**
**பலித்தநும் வாழ்க்கையில் பண்பொன்றும் இல்லீர்**
**பிச்சையிட் டுண்ணவும் பின்படு கின்றீர்**
**பின்படு தீமையின் முன்படு கின்றீர்**
**இச்சையில் கண்மூடி எச்சகம் கண்டீர்**
**எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.**

**தத்துவ ஞானம் என்பது அறிவுப்பொருளாகிய ஆன்மா (உயிர்) தன்னை அறிவில் பொருளாகிய உடலினின்று வேறு என அறிந்து சிந்தித்துத் தெளிதல்**

8. **ஆன்மா எக்காலத்தும் உள்ளதாய் விளங்கப்பட்டது. அது தோன்றுதலும் அழிதலுமில்லை. அதை ஆக்கவும் அழிக்கவும் படாது.**

**- ஜீவகாருண்ய ஒழுக்கம் - 3**

9. **அறிவில்லாத பொருட்கள் தோன்றி அழியும். மாயையின் காரியமாகிய உடல் அழியும். எனவே தத்துவங்கள் நிலையில்லாதவை**

10. **இறைவன் நிலையாக, என்றும் மாறாத தன்மையுடன், மெய் அறிவு இன்ப வடிவாகி எங்கும் நீக்கமற நிறைந்துள்ள மெய்ப்பொருள். அவன் தத்துவங்களைக் கடந்தவன்**

**இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகம் 3:**

> **பிர்ம விஷ்ணு ருத்திராதிகளுடைய பதங்களும் அந்தக் கர்த்தாக்களும் அவர்களால் சிருட்டி திதி சங்காரம் செய்யப்பட்டு வருகிற தேகாதி பிரபஞ்சங்களும் அனித்தியம் - ஆகலில் - நித்தியமாகியும் என்றும் ஒரு தன்மை யுள்ளதாகியும் சச்சிதானந்த வடிவமாகியும் அகண்ட பரிபூரண வஸ்துவாகியும் விளங்கிய சிவமே நமக்குப்பொருள்.**

**#6-074-05 ஆறாம் திருமுறை / உபதேச வினா / தலைவி தோழிக்கு உரைத்தல்**

**ஆறாறுக் கப்புற மாகும் பொதுவில்**
**அதுவது வாநடம் நான்காணல் வேண்டும்**

**ஏறாமல் இழியாமல் இருப்பாயோ தோழி**
**ஏறி இழிந்திங் கிறப்பாயோ289 தோழி.**

### #6-117-32 ஆறாம் திருமுறை / ஞான மருந்து

**ஆறாறுக் கப்பால் மருந்து - அதற்**
**கப்புறத் தீராறுக் கப்பால் மருந்து**
**ஈறாதி இல்லா மருந்து - என்னை**
**எல்லாம் செயச்செய்த இன்ப மருந்து. ஞான**

## 11. 36 தத்துவங்களும் ஆன்மாவிற்கு பரு உடல், நுண் உடல், மிகு நுண் உடல் (காரண உடல்/ பர சரீரம்) எனப் பொருந்தி நிற்கும்

## 12. தத்துவங்களின் வலிமையை வென்று உயர்தல் கடத்தல் ஆகும். தத்துவங்கள் அறிவில்லாதவை என ஆராய்ந்து உணர்ந்து அவற்றை நீக்கி, அவற்றின் முடிவில் நின்ற தன்னை அறிதல் ஆன்ம தரிசனம். இதுவே உயிர் அனுபவம்

**- தத்துவங்கள் அறிவில்லாத கருவிகளே என்று தனக்கு உணர்த்தியது அருள் என்று தெளிந்த அறிவு உயிர் அநுபவம் ஆகும்**

**- ஆர்வமுடையவர்கள் தனக்குள்ளே அறிவார்கள். படிப்பறிவால் இன்னதென அறியலாம். அதிதீவிர விருப்பமுயற்சியால் ஒவ்வொன்றாகக் கடக்கலாம்**

## 13. இப்பயிற்சிக்கு உதவுவது இந்திரிய ஒழுக்கம் முதலியவை.

**தொடக்கத்தில் பொறிகளை (இந்திரியங்களை) அவற்றிற்குரிய வழிகளில் நிறுத்துதல் எ. கா. உடலைப் பேண உணவு, எனவே சுவை விரும்பாதிருத்தல்**

#### #6-012-02 ஆறாம் திருமுறை / அவா அறுத்தல்

**சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடில் ஒருவன் துன்னுநல் தவம்எலாஞ் சுருங்கி
ஆற்றிலே கரைத்த புளிஎனப் போம்என் றறிஞர்கள் உரைத்திடல் சிறிதும்
போற்றிலேன் உன்னைப் போற்றிலேன் சுவையில் பொருந்திய காரசா ரஞ்சேர்
சாற்றிலே கலந்த சோற்றிலே ஆசை தங்கினேன் என்செய்வேன் எந்தாய்.**

**- இப்பயிற்சியின் முதிர்ச்சியால் அடுத்த நிலையில் "இச்சையின்றி நுகர்தல்" கைகூடும் (சாத்தியமாகும்)**

**- இவ்வண்ணம் ஆன்மாவுக்கு ஏற்படும் விருப்பமின்மை ஐந்து பொறிகளிலும் (காது, கண், மூக்கு, வாய், மெய்) முதிர்ச்சி அடைதல் தத்துவங்களைக் கடத்தலில் முதல் படியாகும்.**

#### இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகங்கள் - திருமுகம் 13

**இனி, தாம் தம்முடைய தேகத்தை சாக்கிரதையாக உபசரித்து வர வேண்டும். சாக்கிரதை என்பது அருந்தல் பொருந்தல்களில் மிதபோசனம் மிதபோகம். மித போஜனமாவது - கோபம் - விராகம் - அலக்ஷியம் - முயற்சி - விரைவு இவை முதலிய ஏதுக்களால் குறைத்தல் - விருந்து சுவை விருப்ப முதலிய ஏதுக்களால் ஏற்றல் இல்லாமல் சமமாகப் பொசித்தலாம்.**

## 14. மக்கள் "அறிய வேண்டுவனவற்றை அறிய முயலவில்லை" என்று "கற்பன கற்கிலீர்" எனப் பாடுகிறார்

#### #6-104-04 ஆறாம் திருமுறை / உலகர்க்கு உய்வகை கூறல்

**சாமாந்தர் ஆகாத் தரஞ் சிறிது உணரீர்
தத்துவ ஞானத்தை இற்றெனத் தெரியீர்
மாமாந்த நோயுற்ற குழவியில் குழைந்தீர்
வாழ்க்கையிலே அற்ப மகிழ்ச்சியும் பெற்றீர்
காமாந்த காரத்தில் கண்மூடித் திரிவீர்
கற்பன கற்கிலீர் கருத்தனைக் கருதாது**

**ஏமாந்து தூங்குகின்றீர் விழிக்கின்றீர்**
**எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.**

## 15. கடவுளை "அறிவால் அறிந்து கடவுள் மயமாவதற்கு" தத்துவ நிக்கிரகம் வழி என வள்ளலார் கூறுகிறார்

## 16. வள்ளலார் சங்க விண்ணப்பத்தில் தெளிவாகவும் சுருக்கமாகவும் இதனை விளக்குகிறார்

**16.1 பேரின்ப சித்தி பெருவாழ்வை கடவுளது திருவருட் சுதந்திரம் ஒன்றாலே பெறுதல் கூடும்**

**16.2 திருவருட் சுதந்திரம் என்பது தேக சுதந்திரம், போக சுதந்திரம், ஜீவ சுதந்திரம் நீக்கியவிடத்தே கிடைக்கும்**

### சுத்த சன்மார்க்க சங்க சத்தியவிண்ணப்பம்

**16.3 ஆகலில், எனது சுதந்தரமாகக் கொண்டிருந்த தேக சுதந்தரத்தையும், போக சுதந்தரத்தையும், ஜீவ சுதந்தரத்தையும் தேவரீர் திருவருட்கே சர்வ சுதந்தரமாகக் கொடுத்து விட்டேன். கொடுத்த தருணத்தே இத்தேகமும் ஜீவனும் போகப் பொருள்களும் சர்வ சுதந்தரராகிய கடவுள் பெருங்கருணையாற் கொடுக்கப்பெற்றனம் அன்றி, நமது சுதந்தரத்தாற் பெற்றவன அல்ல என்னும் உண்மையை அருளால் அறிவிக்கவும் அறிந்து கொண்டேன்.**

**இதுவே தவம் - தவ நேயம்**

## 17. என்னை வாழ்வித்தல் வேண்டும்

### சுத்த சன்மார்க்க சங்க சத்தியவிண்ணப்பம்

> **இனி இத்தேகத்தினிடத்தும் ஜீவனிடத்தும் போகப் பொருள்களிடத்தும் தேவரீர் திருவருள் சாட்சியாக எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்தரத் தோற்றமும் தோற்றமாட்டாது.**

**தேவரீர் திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே வைத்தருளி, மரணம், பிணி, மூப்பு, பயம் துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து, இத்தேகத்தையே நித்திய தேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும்.**

**இது துதித்தல் (வேண்டுதல்). கடவுள் அன்பு - சிவ நேயம்**

## 18. எல்லாச் சீவர்களையும் வாழ்வித்தல் வேண்டும்

### சுத்த சன்மார்க்க சங்க சத்தியவிண்ணப்பம்

**இத் தேகத்தைப் பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக்கு அறிவித்த வண்ணமே அறிவித்து, அவரவர்களையும் உரிமையுடையவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.**

**இதுவே தயவு - ஜீவகாருண்யம் - சுத்த சன்மார்க்க நேயம்**

## 19. இங்ஙனமாக "சத்தியமான அதிதீவிர விருப்ப முயற்சியுடையவர்கள்" கடவுளை அறிவால் அறிந்து அம்மயம் ஆவார்கள்

# VETRI

## பின் குறிப்பு: 96 தத்துவங்கள்

| | | | |
|---|---|---|---|
| **ஆன்ம தத்துவங்கள் 24** (பிரகிருதி (பாச) தத்துவம், மலரோன் தத்துவம்) | பூதங்கள் | 5 | நிலம்,நீர்,காற்று,ஆகாயம்,நெருப்பு (புறப்புறக்கருவி) |
| | ஞானேந்திரியங்கள் | 5 | மெய்,நாக்கு,கண்,மூக்கு,செவி (புறக்கருவி) (அறிவுக்கருவி) |
| | கர்மேந்திரியங்கள் | 5 | வாய்,கை,கால்,மலவாய்,கருவாய் (புறக்கருவி) (தொழிற்கருவி) |
| | தன்மாத்திரைகள் | 5 | சுவை,ஒளி,ஊறு,ஓசை,நாற்றம் (புறப்புறக்கருவி) (ஐம்புலன்) |
| | அந்தக்கரணங்கள் | 4 | மனம்,அறிவு,நினைவு,முனைப்பு (உள்கருவி) (அகப்புறக்கருவி) |
| **வித்தியா தத்துவம் 7** (அசுத்த மாயா (மோகினி) தத்துவம், மாலோன் தத்துவம்) | | 7 | 1. புருடன் 2. அராகம் 3. வித்தை 4. கலை 5. நியதி 6. காலம் 7. மாயை (மூலப்பகுதி (பிரகிருதி, மான்)) |
| **சிவதத்துவம் 5** (சுத்த தத்துவம், விந்து தத்துவம், சுத்த மாயா தத்துவம்) | | 5 | 1. சுத்தவித்தை 2. ஈச்சுரம் 3. சாதாக்கியம் (சதாசிவம்) 4. விந்து (சத்தி) 5. நாதம் (சிவம்) |
| **புறக்கருவிகள் 60** | பிருதிவியின் காரியம் | 5 | 1. மயிர் 2. தோல் 3. எலும்பு 4. நரம்பு 5. தசை |
| | அப்புவின் காரியம் | 5 | 1. நீர் 2. உதிரம் 3. மூளை 4. மச்சை 5. சுக்கிலம் |
| | தேயுவின் காரியம் | 5 | 1. ஆகாரம் 2. நித்திரை 3. பயம் 4. மைதுனம் 5. சோம்பல் |
| | வாயுவின் காரியம் | 5 | 1. ஓடல் 2. இருத்தல் 3. நடத்தல் 4. கிடத்தல் 5. தத்தல் |
| | ஆகாயத்தின் காரியம் | 5 | 1. குரோதம் 2. லோபம் 3. மோகம் 4. மதம் 5. மாற்சரியம் |
| | வசனாதி -5 | 5 | 1. வசனம் 2. கமனம் 3. தானம் 4. விசர்க்கம் 5. ஆனந்தம் |
| | வாயு -10 | 10 | 1. பிராணன் 2. அபானன் 3. வியானன் 4. உதானன் 5. சமானன் 6. நாகன் 7. கூர்மன் 8. கிருதரன் 9. தேவதத்தன் 10. தனஞ்சயன் |
| | நாடி -10 | 10 | 1. இடை 2. பிங்கலை 3. சுழுமுனை 4. காந்தாரி 5. அத்தி 6. சிங்குவை 7. அலம்புடை 8. புருடன் 9. சங்கினி 10. குகு |

| | | | |
|---|---|---|---|
| | வாக்கு -4 | 4 | 1. சூக்குமை -சொல் தோன்றாது ஒலி மட்டுமாய் உள்ளது<br>2. பைசந்தி -சொல் விளங்கியும் விளங்காமலுமாய் நிற்பது<br>3. மத்திமை -உதானன் என்ற வாயுவால் பொருள் விளங்க உருவாகும் மொழி நிலை<br>4. வைகரி -சொல் புறத்தே தன் செவிக்கு மட்டும் கேட்கும் நிலை |
| | ஏடணை ( விருப்பம்) - 3 | 3 | 1. தாரவேடணை 2. புத்திர வேடணை 3. அர்த்தவேடணை |
| | குணம் -3 | 3 | 1. சாத்துவீகம் 2. இராசதம் 3. தாமதம் |

**திருச்சிற்றம்பலம்**

**அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி**

**திருவருட் பிரகாச வள்ளலார் திவ்ய திருவடிகளே சரணம் ! சரணம் ! சரணம் !**

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !**
**வள்ளல் மலரடி வாழ்க வாழ்க !**